## தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் ஆகஸ்ட் (13)

## "அனுமதியின்றி வைக்கப்பட்ட விளம்பர பலகைகள், பேனர்கள் மற்றும் ப்ளெக்ஸ் போர்டுகளை அப்புறப்படுத்துதல்"

தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் அனைத்து தர மக்கள் பங்களிப்புடன் 2022 ஜூன் 3ஆம் தேதி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் துவக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல் படுத்திட ஆறு வகையான தலைப்புகளில் இதன் செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் மாதம் 2-வது சனிக்கிழமை அதாவது 13.08.2022 அன்று **"அனுமதியின்றி வைக்கப்பட்ட விளம்பர பலகைகள், பேனர்கள் மற்றும் ப்ளெக்ஸ் போர்டுகளை அப்புறப்படுத்துதல்"** என்ற தலைப்பின் கீழ் உள்ள அனைத்து நடவடிக்கைகளையும் நகர்ப்புற உள்ளாட்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்றி இப்பணிகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- ❖ மாவட்ட ஆட்சியர் தலைமையில் காவல்துறை, வருவாய்துறை மற்றும் இது தொடர்பான பிற துறைகளுடன், ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தி, தெளிவான செயல்திட்டம் வகுக்க வேண்டும்.
- ❖ அனைத்து மக்கள் பிரதிநிதிகள், வணிகர்சங்கப் பிரதிநிதிகள், மற்றும் இது தொடர்பான பிற சங்கப் பிரதிநிதிகளுடன், முன்பே கலந்தாய்வு கூட்டம் ஆணையர் தலைமையிலோ, அல்லது மாவட்ட ஆட்சியர் தலைமையிலோ நடத்தப்பட வேண்டும்.
- ❖ அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சியின் தலைவர்கள் மற்றும் கவுன்சிலர்களின் முழு ஒத்துழைப்பு இப்பணிக்கு மிகவும் அவசியம் என்பதை அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.
- ❖ ஒரு நகர்ப்புற உள்ளாட்சியில் உள்ள அனைத்து பகுதியிலும் உள்ள அனுமதியற்ற விளம்பர பலகை, பேனர்கள் மற்றும் ப்ளக்ஸ் போர்டுகள் குறித்து முன்பே ஒருமுறை கணக்கெடுத்து, தெளிவான குழுக்களாக பிரிந்து அவற்றை அப்புறப்படுத்தலாம்.

- ❖ அனுமதியின்றி வைக்கப்படும் அனைத்து விளம்பரப்பலகை, பேனர்கள், ப்ளெக்ஸ் ஆகியவற்றை முதலில் அப்புறப்படுத்த வேண்டும்.
- ❖ இப் பணியின்போது அவற்றை தாங்கி நிற்கும், இரும்பு மற்றும் மரத்திலான அமைப்புகள் (Structure) முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும்.
- ❖ சாலையோரங்களில் உள்ள பயன்பாடின்றி நீண்ட நாட்களாக வைக்கப்பட்டிருக்கும் மரச்சாமான்கள், பழுதடைந்த வாகனங்கள் மற்றும் இதர உபயோமற்ற பொருட்களை முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும்.
- ❖ ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சியிலும் இதற்கென ஒரு இடத்தை தெரிவு செய்து (Designated Place) அவ்விடத்தில் அனைத்து பொருட்களையும் கொண்டு சேர்க்க வேண்டும்.
- ❖ இது, பிறகு அவற்றை மதிப்பிட்டு ஏலத்தில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.
- ❖ காவல் நிலையங்களில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் இருப்பின், மாவட்ட ஆட்சியரின் துணையுடன், காவல் கண்காணிப்பாளருக்கு தெரிவித்து அவற்றை முறையான நடவடிக்கை மூலம் அப்புறப்படுத்த வேண்டும்.
- ❖ அனைத்து சுவர்களிலும் உள்ள நோட்டீஸ்களை முழுமையாக அப்புறப்படுத்தி, சுவரை சுத்தமாக வைக்க வேண்டும்.
- ❖ அடிக்கடி நோட்டீஸ் ஒட்டப்படும் இடங்களாக இருந்தால் (Vulnerable Points / Walls) அவற்றை வண்ண ஓவியங்கள் தீட்டி நோட்டீஸ் ஒட்டுவதை தவிர்க்கும் வகையில் செய்யலாம்.
- ❖ ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சியிலும் காலியிடங்களில் (Vacant site) உள்ள அனைத்து குப்பைகளையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- ❖ நில உரிமையாளருக்கு, பொதுசுகாதார சட்டத்தின் கீழ் உள்ள பொறுப்பை சுட்டிக்காட்டி, அவரின் இடத்தை தூய்மையாக பராமரிக்க அறிவுறுத்த வேண்டும்.
- ❖ ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சியிலும் Zone அளவிலோ வார்டு அளவிலோ, மக்கள் பிரிநிதிகள், குடியிருப்போர் நலசங்கப்பிரதிநிதிகள், தன்னார்வலர்கள் ஆகியோர் அடங்கிய Whatsapp குழுக்கள் அமைத்தல் அவசியம் ஆகும்.
- ❖ Whatsapp குழுக்களில் நகராட்சி அலுவலர்கள் மட்டுமே அட்மினாக வைக்கலாம், மேலும் அவர்கள் மட்டுமே தகவல்களை பகிரும் வண்ணம் குழுவை வடிமைத்துக் கொள்ளலாம். இது தேவையற்ற பதிவுகள் ஏற்றப்படுவதை தவிர்க்கும்.

- தூய்மையான நகரங்களுக்கான மக்கள் இயக்கம் திட்டம் ஒவ்வொரு இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளிலும் செயல்படுத்தப்படும் என்பதால், ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சியிலும் தன்னார்வலர்களின் சேர்க்கையை மேலும் அதிகரிக்க வேண்டும்.
- ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சியிலும் தன்னார்வலர்கள் இப்பணியில் பங்கேற்க தொடர்பு கொள்ளும் வகையில் ஏதேனும் தொலைபேசி எண்ணோ அல்லது பிற தொடர்பு முறைகளையோ கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்.
- தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் **Swachhtam portal– ல் IEC activities** தலைப்பில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- நான்கு தெளிவான புகைப்படங்கள், முக்கிய விபரங்களுடன் நகர் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் **sbmpmucma@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- அனைத்து விபரங்களும் நகர்ப்புற உள்ளாட்சிகள் சமூக வலைதள பக்கங்களிலும், **MawsTamilnadu, SbmurbanTN** என்ற **Twitter** மற்றும் **Facebook** பக்கங்களிலும் பதிவு செய்ய வேண்டும்.
- Swachhta app அதிக அளவு பதிவிறக்கம் செய்வதுடன், அனைவரையும் அந்த செயலியை ஆக்க பூர்வமாக உபயோகப்படுத்த ஊக்கவிக்க வேண்டும்.
- அனைத்து நடவடிக்கைகளையும் செய்தித்தாள், உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் சமூக வலைதளங்கள் மூலம் பிரபலபடுத்த பட வேண்டும்.
- பணியின் போது தூய்மைப்பணியாளர் மற்றும் அனைத்து தன்னார்வலர்களுக்கு தேநீர், சிற்றுண்டி போன்றவை ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- அனைத்து செயல்பாடுகளையும் தூய்மை உறுதி மொழியுடன் ஆரம்பித்தல் வேண்டும்.

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் பெருமளவிலான மக்கள் பங்களிப்புடன் தூய்மையான நகரங்களை உருவாக்குவதாகும். அதனை நோக்கியே அனைத்து செயல்பாடுகளும் அமைதல் வேண்டும்.

**நகராட்சி நிர்வாக இயக்குநர்**